(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 3 (1)]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2009, ஏப்பிறல் 22, புதன்கிழமை வெளியிடப்பட்டது

## 2009, மே 05, செவ்வாய்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0897 / '08

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பொருட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பதிகாரிகளின் பெயர்ப் பட்டியல், அவ்வுத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நிறுவனங்கள் மற்றும் பதவிகள், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்க ளுக்கு ஏற்ப தனித்தனியாக யாவை,

(ii) வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களின் பொருட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பதிகாரிகளின் பெயர்ப் பட்டியல், அவ்வுத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நிறுவனங்கள் மற்றும் பதவிகள், மாவட்ட ரீதியில் தனித்தனியாக யாவை,

(iii) இதற்கிணங்க கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களின் போது வாக்கெடுப்பு நிலைய மட்டத்தில் மற்றும் சாவடி இலக்கங்களின் படி வாக்குக் கணிப்பீட்டு பிரதம உத்தியோகத்தர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களது பெயர்ப்பட்டியல், முகவரிகள் மற்றும் சேவையாற்றுகின்ற நிலையங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களின் போது செயற்பட்ட கணினி அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் பெயர், பதவிகள் மற்றும் நிறுவனங்கள் தனித்தனியாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1112 / '08

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மத்திய போக்குவரத்து சபையின் போக்குவரத்து கணக்கு உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பவர் யாரென்பதையும்,

(ii) அவரது முழுப் பெயர் மற்றும் சொந்த முகவரி யாவையென்பதையும்,

(iii) அவரது கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் யாவை யென்பதையும்,

(iv) அவர் மேற்படி பதவிக்கு எந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளாரென்பதையும்,

(v) அவரது அடிப்படை சம்பளம், அனைத்துக் கொடுப்பனவுகளும் அடங்கிய சம்பளம், ஏனைய சலுகைகள் மற்றும் கொடுப்பளவுகள் யாவையென்ப தையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

1142 / '08

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கமநல அபிவிருத்தி அதிகார சபை 2002.12.31 ஆம் திகதியன்று ஒழிக்கப் பட்டதாக 2004.02.31 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகளின் பிரகாரம் இழப்பீட்டை பெற்றுக்கொண்டு சேவையிலிருந்து விலகுவதற்கும், அரச சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டதென்பதையும்,

அவர் அறிவாரா ?

(ஆ) (i) இழப்பீடு பெற்றுக்கொண்டு சேவையிலிருந்து விலகாத பல்வேறு பதவி பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் எத்தனை பேர் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதையும்,

(ii) குறிப்பிட்ட பதவிப் பிரிவுகளுக்கேற்ப தகுந்த கடமைப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி பதவிப் பிரிவுகளில் உதவி பணிப்பாளர் /கமநல ஆராய்ச்சி மற்றும் விவசாய விளைவுப் பெருக்க உத்தியோகத்தர் பதவிகளை வகிக்கின்ற நிறை வேற்று உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள சேவை திறமைகளுக்கேற்ப கடமைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) மேற்படி உத்தியோகத்தர்களிடமிருந்து பயன்மிக்க சேவையை அரசாங்கம் பெற்றுக்கொள்வதாயின் அவை யாவை என்பதையும்,

(v) மேற்படி (ஆ) (iii) உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் இணைக்கப்பட்டு தற்போது எவ்வளவு காலம் ஆகின்றது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

சுகாதார நலத்துறை ,போசணை அமைச்சர்,— நுளம்புப்பெருக்க தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்புப் பெருக்கற் தடுப்புச் சட்டத்தின் 3 ஆம் 5 ஆம் 13 ஆம் மற்றும் 17 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும்

23 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை ,போசணை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008 ஆகஸ்ட் மாதம் 22 ஆந் திகதிய 1563 / 31ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுகாதார நலத்துறை ,போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2009, மே 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1152 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஹோமாகம சியம்பலாகொட ஒளுபட்டால குளம், 16 ஏக்கர் அளவிளான ஒரு தனியார் குளமாக இருந்த போது கமநல அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் படி 1968 ஆம் ஆண்டில் அக்காலத்தின் கொழும்பு மாவட்டச் செயலாரினால் மேற்கொள்ளப்பட்ட அளவைக் கட்டளைக்கமைய பொறுப் பேற்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மு.பி.கொ. 880 திட்டவரைப்படத்தின் படி , பொறுப்பேற்கப்பட்ட பகுதி 12 ஏக்கர் .00 ரூட்ஸ் 38.6 பர்ச்சஸ் ஆக வரைப்படத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள தென்பதையும் ,

(ii) பொறுப்பேற்கப்படாத 4 ஏக்கரில் வீடமைப்பதற்கோ அல்லது வேறு அபிவிருத்தியை மேற்கொள்வதற்கோ இடமளித்தால் அது குளத்தின் இன்றைய நிலைமையை மாற்றி குளம் மாசடைவதற்கான தாக்கத்தை ஏற்படுத்துமென கமநல அமைப்புகளால் பல தடவை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் தெரிவிக்கப்பட்டிருப்பதையும்,

(iii) குளமொன்றுக்கு பாதுகாப்பு பிரதேசம் அவசியமென்பதையும் ,

அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) அதன் பிரகாரம், குளத்தின் பாதுகாப்புப் பிரதேசத்தை பாதுகாப்பதற்காக அவர் எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0655 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) துறைமுகங்கள் விமானசேவைகள் அமைச்சிற்காகவும் அவ்வமைச்சுக்குச் சொந்தமான ஏதேனும் கம்பனிக்காகவும் கடந்த 4 வருடங்களாக இற்றை வரையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினை வருடாந்த அடிப்படையிலும், அலுவலக இடத்திற்காக வாடகைக்கு அமர்த்துவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) இக்காலப்பகுதியில் இவ்வாகனங்களுக்கான எரிபொருளுக்கென செலவிடப் பட்ட மொத்தத் தொகையினை அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் நூற்றுவீதமாகவும்,

(ii) வாடகைக்குப் பெறப்பட்ட அலுவலக இடத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) குத்தகைக்கு கட்டிடம் பெறப்பட்ட காலத்தினையும் அதற்கு வைப்புப்பணமாகச் செலுத்தப்பட்ட முற்பணத்தையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1146 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 ஆம் ஆண்டு கொழும்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்த, மற்றும் சத்திர சிகிச்சைக்குள்ளாக்கப்பட வேண்டுமென இனங் காணப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இருதய சத்திர சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய எனினும் மருத்துவமனை வசதிகளுக்கமைய 2008 ஆம் ஆண்டில் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை வெவ் வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1113 / '08

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கொழும்பு 10, மாளிகாவத்தை , ரஜபொகுண வீதியில் வதியும் திருமதி டபிள்யூ. எல். பி. சிறியாவதியினால் மாளிகாவத்தை புதிய நகரத்தில் அமைந்துள்ள ரஜபொகுண எனும் ஸ்நான கிணறு சுமார் 32 வருட காலமாக பராமரித்து நிருவகிக்கப் படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) வருடாந்தம் வரி செலுத்தி இற்றை வரை இவர் நிருவகித்து வந்த மேற்படி கிணற்றை வேறு பிரிவினருக்குப் பெற்றுத்தருவதற்கு முயற்சிப்பது எக்காரணத் தினால் என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) (i) மேற்படி கிணற்றுக்கு அருகில் புத்தர்சிலைக் கூடமொன்றை அமைக்கும் போது அதை உடைத்து சுமார் 5 இலட்சம் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன ரென்பதைதயும்,

(ii) மேற்படி இடத்தில் வேறு சமய வழிபாடுகளை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஒன்பது பிள்ளைகளுக்குத் தாயான திருமதி சிறியாவதிக்கு தொடர்ந்தும் மேற்படி கிணற்றை நிருவகிப்பதற்கு ஆவன செய்வதற்குரிய நடவடிக்கை அவர் எடுப்பரா?

(உ) இன்றேல், ஏன்?

1147 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 ஆம் ஆண்டு கொழும்பு தெற்கு களுபோவில போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக வந்த மற்றும் சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இருதய சத்திர சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டிய எனினும் மருத்துவ மனை வசதிகளுக்கமைய 2008 ஆம் ஆண்டில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை வெவ் வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1161 / '08

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையை கலைக்கும்போது நட்டஈடுபெற்றுக் கொண்டு சேவையிலிருந்து விலகாத பதவி வகுதிகளைச் சார்ந்த உதவிப் பணிப்பாளர்கள் / கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் விளைச்சல் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால், கமத்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு அமைச்சின் செயலாளருக்கும் கமத்தொழில் அதிகாரசபையின் ஒழிப்போனுக் கும் பிரதிகள் சகிதம் வரவு செலவு திட்ட பணிப்பாளர் நாயகத்தை விழித்து DMS/ A மற்றும் L 05 இலக்கமும் 2003.07.03 ஆம் திகதியும் கொண்ட கடிதம் முலம் ஆலோசனை வழங்கப்பட்ட (I) (II) பிரேரணையை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி பிரேரணையை அமுல்படுத்துவதற்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள திட்டம், பிரேரணை யாவையென்பதையும்,

(ii) இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இயலாமல் போயிருப்பின், அதற்கான காரணம் யாதென்பதையும்

(iii) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை நடைமுறையில் இருந்தபோது இவ்வுத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் தற்போதும் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த உத்தியோகத்தர்களை மேற்படி (அ) இல் காட்டப்பட்டுள்ள பிரே ரணைக்கேற்ப அரச சேவைக்கு உள்வாங்கிக் கொள்வதற்கு கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்க ளிலுள்ள வெற்றிடங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி பதவி வகுதிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மேற்படி உதவிப்பணிப்பாளர்கள் /கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் விளைச்சல் மேம்பாட்டு உத்தியோகத்தர்களை அரச சேவைக்கு உள்வாங்கி மேற்படி பதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1156 / '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண – கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கமத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமாக இருந்த தலாவ, மல்வானேகம விவசாயப்பண்ணை. தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) ஆமெனில் எந்த அடிப்படையில், எந்த நிறுவனத்திற்கு அல்லது எந்த நபருக்கு மேற்படி பண்ணை வழங்கப்பட்டுள்ளதென்பதையும் ,

(ii) மேற்படி பண்ணையை குறிப்பிட்ட நிறுவனத்திற்கு வழங்கிய போது இருந்த ஒரு வருடத்துக்கான குத்தகை எவ்வளவென்பதையும் ,

(iii) குத்தகைக்கு விடப்பட்ட திகதியிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரை பெறப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும் ,

(iv) நிலையான தொகையொன்று பெறப்பட்டிருப்பின் அது எவ்வள வென்பதையும் ,

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி பண்ணையை குத்தகைக்கு இடும் போது பண்ணைக்குச் சொந்தமாக இருந்த அசையா மற்றும் அசையும் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி சொத்து எத்தகைய காரியத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட தென்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஈ) (i) மேற்படி பண்ணை எத்தகைய நோக்கத்துக்காக எப்போது தாபிக்கப்பட்ட தென்பதையும்,

(ii) தற்போதைய நிருவாகத்தால் மேற்படி பண்ணை குறிப்பிட்ட நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுசாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

1157/ '08

கௌரவ ஆர்.பி.ஏ ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அனுராதபுர மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அவற்றுள், மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வாகனங்களுக்காக 2007 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் வழங்கப்பட்ட டீசல் மற்றும் பெற்றோலின் அளவு எவ்வள வென்பதையும்,

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில், பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் 05 வருடங்கள் கடந்த வாகனங்கள் மற்றும் பதிவின் பின்னர் 05 வருடங்கள் முடிவடையாத வாகனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) மிகவும் மோசமான நிலையிலுள்ள வாகனங்களை பயன்படுத்துகின்ற பொலிஸ் நிலையங்களுக்கு தேவையான வாகனங்களையும் போதியளவு எரி பொருளையும் பெற்றுத்தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1158 / '08

கௌரவ ஆர். பி. ஏ ரணவீர பதிரண,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அனுராதபுரம் தலாவ ஊடாக கெகிராவ வீதியில் தலாவ நகரத்திலிருந்து எப்பாவல நோக்கி புணரமைப்பு செய்யப்பட்ட வீதியின் நீளம் எத்தனை கிலோமீற்றர்கள் என்பதையும்,

(ii) மேற்படி புணரமைப்பு நடவடிக்கைகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி புணரமைப்பு நடவடிக்கைக்கு கிடைத்த கேள்விப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி கேள்விப்பத்திரம் எந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதியின் புணரமைப்பு நடவடிக்கையின் போது திருத்தப் பட்ட மதகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அதற்கான மதிப்பீட்டுத் தொகை யாதென்பதையும்,

(iii) மேற்படி வீதி புணரமைப்பின் போது ABC யை பயன்படுத்தி புணரமைப்பு செய்யவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வீதியின் நீளம் எவ்வளவென்பதையும்,

(iv) மதிப்பீடு செய்யப்பட்ட தூரத்தில் எவ்வளவு தூரம் மேற்படி முறையில் புணரமைக்கப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி பாதை உரிய முறையில் புணரமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) உரிய முறையில் புணரமைக்கப்படவில்லையாயின், மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(உ) புணரமைக்கப்பட்ட மேற்படி பாதையின் சில பகுதிகள் குன்றும் குழியுமாகியுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல்,ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, மே 06, புதன்கிழமை)**

1206 / '09

கௌரவ ஆர். பி. எ. ரணவீர பத்திரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) அமைச்சர்களினதும் பணியாளர் குழுவினதும் பாவனைக்காக வாகனங்கள் கூலிக்கு அல்லது வாடகைக்கு பெறப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வாகனங்கள் அவ்வாறு கூலிக்கு அல்லது வாடகைக்கு பெறப்பட்டிருப்பின் 2008 ஆம் ஆண்டில் அமைச்சர்களின் பாவனைக்காக எத்தனை வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதையும்,

(ii) அமைச்சர்களின் பணியாளர் குழுவுக்காக எத்தனை வாகனங்கள் கூலிக்கு அல்லது வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதையும்,

(iii) 2008 ஆம் ஆண்டில் அந்த வாகனங்களுக்காக செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iv) அமைச்சர்கள், மற்றும் பணியாளர் குழுவுக்காக 2008 ஆம் ஆண்டில் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது எ ன்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அதன்படி, இதற்காக கூலியாக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1255 / '09

கௌரவ அஜித் குமார,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் தற்பொழுது கறுவா பயிரிடப்பட்டுள்ள காணிகளின் அளவும் கறுவா பயிர்ச் செய்கையாளர்களின் எண்ணிக்கையும் எவ்வளவு என்பதை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்,

(ii) அக்கறுவா பயிர்ச் செய்கையாளர்களுக்கிடையே 2 ஏக்கருக்குக் குறைந்த, 2 ஏக்கருக்குக் கூடிய, 5 ஏக்கருக்குக் கூடிய,10 ஏக்கருக்குக் கூடிய மற்றும் 50 ஏக்கருக்குக் கூடிய காணிகள் என்ற வகையில் பயிர்ச் செய்கையாளர்களால் பயிரிடப்படும் காணிகளின் அளவு எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்,

(iii) இலங்கையில் கறுவாப்பட்டை உரிப்பவர்கள், கறுவா வர்த்தகர்கள் ஆகியோரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் கறுவா ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கையும் அந்நபர்களின் அல்லது நிறுவனங்களின் பெயர்களும் யாவை,

(ii) மேற்படி ஏற்றுமதியாளர்களால் கடந்த 5 ஆண்டுகளில் ஏற்றுமதிச் செய்யப்பட்ட கறுவாவின் அளவு எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

---

## 2009, மே 07, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1159 / '08

கௌரவ ஆர். பி.ஏ ரணவீர பதிரண,—உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வட மத்திய மாகாணத்தின் அலுவல்களுக்காக நிருமாணிக்கப்படும் அமைச்சுகளுக்கான கட்டிடத் தொகுதியின் நிருமாணப் பணிகள் எந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(ii) நிருமாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்ட நிருவனம் யாதென்பதையும், சம்பந்தப்பட்ட நிருமாணப் பணிகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(iii) மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகையும்,

(iv) அதில் எவ்வளவு பணத்தொகை செலுத்தப்பட்டதென்பதையும்,

(v) அவ்வாறு செலுத்தப்பட்ட திகதி மற்றும் செலுத்த எஞ்சியிருக்கும் பணத்தொகை யாதென்பதையும்,

(vi) மூலத்திட்டத்திற்மைய இக்கட்டிடம் எத்தனை மாடிகளைக் கொண்ட தென்பதையும்,

(vii) அதன் மொத்த பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(viii) மேற்படி மூலத்திட்டத்திற்கு மேலதிகமாக புதிய மாடியொன்று சேர்க்கப்பட்டதா என்பதையும்,

(ix) ஆமெனில், அதன் பரப்பளவு யாதென்பதையும்,

(x) மேற்படி மாடியை சேர்ப்பதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தின் வேலை ஆரம்பிக்கப்படவிருந்த மற்றும் பூர்த்தியாக்கப் பட விருந்த திகதிகள் யாவையென்பதையும்,

(ii) தற்போதுள்ள நிலைமையின் கீழ் மேற்படி கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படவிருக்கும் திகதி யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1160 / '08

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு குடிநீர் வழங்குகின்ற மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகார பிரதேசத்திற்குற்பட்ட சூரியவெவ வாவிக்கான ஒதுக்குப்பிரதேசத்தில் உள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் நீர்த்தேக்கத்தில் இடப்படுகின்ற கழிவுப்பொருட்களின் காரணமாக குடிநீர் பெறும் நீர்த்தேக்கம் அசுத்தாகமாகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) (i) வாவிக்கான ஒதுக்குப்பிரதேசத்தில் உள்ள அனுமதியற்ற குடியிருப் பாளர்களின் பெயர் , முகவரி , குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் அனுமதியின்றி அங்கு குடியிருந்த காலப்பகுதி ஒவ்வொரு குடும்பத்திற்கும் உரியதாக வெவ்வேறாக யாவை என்பதையும்,

(ii) வீரவில விமான நிலையத்தை நிர்மாணிக்கும்போது காணிகளை இழக்கின்றவர்களுக்காக வழங்கப்படவிருந்த மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணித்துண்டுகள் உரிய விமான நிலையம் அங்கு நிர்மாணிகப்படாததால் வாவிக்கான ஒதுக்குப்பிரதேசத்தில் உள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படுமா என்பதையும்,

(iii) இன்றேல், இவர்களுக்கு பாசனக்காணிகளும் மேட்டுக்காணிகளும் வழங்கப்படும் இடம் மற்றும் உரிய பாசனக்காணிகளினதும் மேட்டுக்காணி களினதும் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) நீண்டகாலமாக அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ள சொத்துக்களை அவர்கள் அகற்றப்படும் போது இழக்க நேரிடுவதால், வர்த்தக பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நட்டஈடு செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1168 / '08

கௌரவ வஜிர அபேவர்தன,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இம்முறை இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் முழுநேர பாடநெறிகளைப் பயில்வதற்காக விண்ணப்பித்தருந்த 24 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) இவர்களுள் எத்தனை பேருக் முழுநேரப் பாடநெறிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஒருவரிடம் 250/= ரூபா வீதம் அறவிடப்பட்டு, இருப்பினும் வயது அடிப்படையில் பாடநெறிகளுக்காக தெரிவு செய்யப்படாத 24 வயதைக் கடந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து உரிய நிறுவனம் ஈட்டியுள்ள தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1170 / '09

கௌரவ விஜித ரணவீர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வருடாந்தம் வழங்கப்பட்டுள்ள புதிய தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) 2008 ஆம் ஆண்டு இறுதியில் இம்மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்த தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 16 வயதைப் பூர்த்தி செய்திருந்த போதிலும் மாவட்டத்தில் இதுவரை தேசிய அடையாள அட்டை பெறாதுள்ளவர்கள் உள்ளனரா,

(ii) ஒவ்வொரு பிரதேச செயலாளர் மட்டத்திலும் இவ்வெண்ணிக்கை எவ்வளவு,

(iii) இவர்கள் தேசிய அடையாள அட்டை பெற முடியாதுள்ளமைக்கான தடைகள் யாவை,

(iv) மேற்படி தடைகளைத் நீக்கி அடையாள அட்டைகள் இல்லாதோருக்கு அடையாள அட்டைகளை வழங்குவதற்கு உரிய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கனணிமயப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை (e-NIC) வழங்குதல் எப்போது ஆரம்பிக்கப்படும்,

(ii) மேற்படி அடையாள அட்டையொன்றை (e-NIC) பெறுவதற்கு ஒரு பிரசைக்கு ஏற்படக்கூடிய செலவு எவ்வளவு,

(iii) திணைக்கள அலுவல்களை பிரதேச செயலகங்கள் வரை பன்முகப் படுத்துதலின் முன்னேற்றம் யாது,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ,ஏன்?

1171 / '09

கௌரவ விஜித ரணவீர,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1230000/= ரூபா சந்தைப் பெறுமதியுடையதும் 2000 ஆம் ஆண்டு உற்பத்திச் செய்யப்பட்டதுமான 227-5808 தண்ணீர் பவுசர் அம்பாந்தோட்டை பிரதேச சபைக்குச் சொந்தமானதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சுனாமி பேரழிவுக்குள்ளாகி பழுதடைந்திருந்த மேற்படி தண்ணீர் பவுசரைத் திருத்துவதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இந்த பவுசரைத் திருத்தும்போது சம்பந்தப்பட்ட பிரதேச சபையின் தலைவர் பொருளாதார நன்மை, வாகனத்தின் சேவைக்காலம் மற்றும் நிலைமை போன்றவற்றை கருத்திற்கொண்டு நடவடிக்கை மேற்கொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) பொது நிதியை சிக்கனமாகவும் வினைத்திறன்மிக்க வகையிலும் ஈடுபடுத்த குறிப்பிட்ட தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி விடயம் தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டிருக்குமாயின் உரிய விசாரணை அறிக்கைகளை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) மேற்படி விடயம் தொடர்பாக நடைமுறைச் சட்டத்திற்கு முரணாக செயற்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை யென்பதையும்,குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(ii) தவறான முறையில் கையாளப்பட்ட பணத்தை மீண்டும் பிரதேச சபைக்கு அறவிட்டுக்கொள்ளவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1173/ '09

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி, நாகொடை, பரணதானாயம்கொட கனிஷ்ட வித்தியாலயம் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது,

(ii) மேற்படி பாடசாலைக்குரிய காணியை நன்கொடையாக வழங்கியவர் யார்,

(iii) மேற்படி பாடசாலை மூடப்பட்டு எவ்வளவு காலம் கடந்துள்ளது,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஓர் முன்னாள் ஆளுநரான திரு. எம். எஸ். அமரசிறி உட்பட பெருமளவு கல்விமான்களை நாட்டிற்கு வழங்குவதற்கு இப்பாடாசாலை அடிப்படை யாயிருந்ததென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலை மூடப்பட்டுள்ளமையால் குறைந்த வருமானம் பெறும் பெற்றோருக்கு, அதிக பணத்தைச் செலவிட்டு பாடசாலை வான் வண்டிகளின் மூலம் அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்ப நேரிட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) கட்டிடங்கள் உள்ளிட்ட வசதிகளைக் கொண்டுள்ள இப்பாடசாலைக்கு தமது பிள்ளைகளை அனுப்பவதற்கு பெற்றோர்கள் தயாராயுள்ளனர் என்பதால், தேவையான ஆசிரியர்களை வழங்கி எவ்வளவு காலத்தில் மேற்படி பாடசாலையை ஆரம்பிக்க அவர் நடவடிக்கை எடுப்பார்?

(ஈ) இன்றேல், ஏன்?

1202 / '09

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரன,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு இலங்கையில் பதிவுசெய்யப்பட் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி வாகனங்களில் டீசல் வாகனங்கள் மற்றும் பெற்றோல் வாகனங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு,

(iii) பதிவு செய்யப்பட்டுள்ள பெற்றோல் வாகனங்களில் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய வாகனங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மொத்த பெற்றோல் விற்பனையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கு எத்தனை நூற்றுவீதம் விற்பனை செய்யப்படுகின்றது என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) பெற்றோல் விலை தொடர்ச்சியாக டீசல் விலையை விட அதிக பெறுமானத்தைக் கொண்டிருப்பதன் காரணமாக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்கின்ற பயணிகள் கடும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1203/ '09

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) படை வீரர்களுக்காக 50,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி படை வீரர்களுக்கான வீடுகளை நிர்மாணித்தல் எப்போது ஆரம்பிக்கப்பட்டது,

(ii) மேற்படி வீடுகளை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் எந்த இடத்தில் எத்தனை வீடுகளில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன,

(iii) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது,

(iv) படை வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது

ஆகிய விபரங்களை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) இக்கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது :

(ii) செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) படைவீரர்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம் மிகவும் மந்தகதியிலேயே இயங்கிவருகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

1257 / '09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில் , நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் கடற்றொழில் துறைமுகங்கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில் , அவ்விடங்களும், அத்திகளும் யாவையென்பதையும்,

(iii) அடிக்கல் நாட்டப்பட்ட இடங்களில் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) ஆமெனில், அது எவ்விடத்தில் என்பதையும்,

(v) மேற்படி அமைப்புப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(vi) மேற்படி அமைப்புப் பணிகளின் தற்போதைய முன்னேற்றம் எவ்வாறான தென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1238/09

கௌரவ பேமசிறி மானகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) திருகோணமலை – நிலாவெளி ஊடாக வீதியொன்று அமைக்கப்பட்டு வருகின்றதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி வீதியின் நீளம் மற்றும் அகலம் யாது ,

(ii) அவ்வீதி தொடர்பாக மதிப்பிடப்பட்ட பணத்தொகை யாது,

(iii) இதனோடு தொடர்புடைய நிதி வசதிகள் எவ்வாறு கிடைக்கின்றன,

(iv) மேற்படி வீதி எவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

1239 / '09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் 2000 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு,

(ii) நட்டமடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி நட்டத்தை இலாபமாக மாற்றும்பொருட்டு ஏற்கெனவே மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

---

## 2009, மே 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1208 / '09

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டில் அனைத்து பாடசாலைகளிலும் பணியாற்றும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) தமில் மொழி மூல பாடசாலைகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) இவர்களுள் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், மற்றும் வேறு துறைகளுக்கான பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(v) பட்டமாக தமில் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு பட்டக் கல்வி பயின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) இந்த ஆசிரியர்களுள் ஆங்கில மொழி மூலம் அல்லது ஆங்கிலத்தை பட்டமாக கற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இந்த பாடசாலைகளின் போதுமானளவு பட்டதாரிகள் பணியாற்றவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

1210 / '09

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— பெற்றோலிய, பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இந்திய IOC கம்பனி இந்நாட்டில் பெற்றோலிய எண்ணை விநியோகத்தை ஆரம்பித்த திகதி யாது என்பதையும்,

(ii) இந்திய IOC கம்பெனியினால் 2007, 2008 ஆம் ஆண்டுகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெற்றோல் மற்றும் டீசலின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கூறியவாறு பெற்றோல் மற்றும் டீசல் விற்பனையிலிருந்து எவ்வளவு வருமானத்தைப் பெற்றுக் கொண்டது என்பதையும்,

(iv) IOC கம்பெனி இலங்கைக்கு பெற்றோல் மற்றும் டீசலை இறக்கு மதி செய்ததா என்பதையும்,

(v) அவ்வாறெனின் 2007, 2008 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்யின் அளவு எவ்வளவு என்பதையும்,

(vi) அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்க்கு வரி அறவிடப்பட்டதா என்பதையும்,

(vii) அவ்வாறு வரி அறவிடப்பட்டிருப்பின் நுகர்வோரினால் எண்ணெய் கொள்வனவு செய்யும் வரை அறவிடப்பட்ட வரிகள் என்ன என்பதையும்,

(viii) தலா ஒரு லீற்றர் டீசல், பெற்றோலுக்காக அறவிடப்பட்ட வரித்தொகை எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறியவாறு கம்பெனியிடமிருந்து 2007 மற்றம் 2008 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட்டுள்ள மொத்த வரித்தொகை எவ்வளவு என்பதையும்

(ii) நாட்டின் மொத்த எண்ணெய் விற்பனையில் இந்தக் கம்பெனி எத்தனை வீதத்தை விற்பனை செய்கின்றது என்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1211 / '09

கௌரவ ஆர். பி. எ. ரணவீர பத்திரண,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரச வைத்தியசாலைகளினால் பயன்படுத்துவதற்காக 2007, 2008 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த மருந்துக்கள் மற்றும் உபகரணங்களுள் காலம் கடந்தவையென கருதப்பட்டு நீக்கப்பட்டவை எவ்வளவு என்பதையும்,

(iii) அந்நந்த வருடங்களில் அவற்றின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iv) 2007, 2008 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்து மற்றும் உபகரணங்கள் குறிப்பிட்ட தரத்துக்கு ஏற்புடையவையல்ல என கருதப்பட்டு நீக்கப்பட்டவற்றின் அளவு எவ்வளவு என்பதையும்,

(v) அவ்வாறு பாவனையிலிருந்து நீக்கப்பட்ட மருந்துக்கள் எவை என்பதையும்,

(vi) அந்த மருந்துக்களின் அளவு மற்றும் பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் கூறுவாரா?

(ஆ) (i) பாவனையிலிருந்து நீக்கப்படும் சந்தர்ப்பத்தில் மேற்கூறிய மருந்துகள் மற்றும் உபகரணங்களில் எவ்வளவு பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதையும்,

(ii) உரிய தரத்தினைக் கொண்டிராத மருந்துப் பொருட்களை பாவித்தல் மற்றும் கொள்வனவு செய்தலை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1240 / '09

கௌரவ பேமசிறி மானகே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) "மிஹின் லங்கா" விமான சேவைக்காக 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த விமான சேவைக்கு மேலதிகமாக அரசாங்கம் சம்பந்தப்பட்டுள்ள மற்றுமொரு விமான சேவை உள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அதன் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மிஹின் லங்கா விமான சேவைக்குச் சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை எத்தனை,

(ii) அந்த விமானங்களின் பதிவிலக்கங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) கடந்த வருடத்தில் மிஹின் லங்கா விமான சேவைக்குக் கிடைத்த இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1242 / '09

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2009 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அதிமேதகு ஜனாதிபதியின் செலவுத் தலைப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதை அவர் இந்தச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2009 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் "கடற்றொழில்" தலைப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) □கடற்றொழில்□ செலவுத் தலைப்புக்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1244 / '09

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2009 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் சமூர்த்தி நிவாரணத்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதை அவர் இந்தச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2009 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் சமூர்த்தி நிவாரணத்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

1272 / '09

கௌரவ எம் ஜோசப் மைக்கல் பெரேரா,— சுகாதார நலத்துறை போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007.07.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட வினாவிற்கு பதிலளிக்கும் போது, இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் 2002.08.28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் மூலம் திரு.எச்.ஆர்.எம்.பீ.பீ கம்பாரவத்தையின் இடது கரத்தின் 5 ஆம் விரல் முழுமையாகவும் 4 ஆம் விரலின் இரண்டு விரற் கணுக்களும் அகற்றப்பட்டதென குறிப்பிடப்பட்ட தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) தவறான சிகிச்சையின் காரணமாக விரலொன்றும் மற்றுமொரு விரலின் இரண்டு கணுக்களும் அகற்றப்பட்டமை தொடர்பாக விசாரணை மற்றும் திடீர் சுற்றிவளைப்பு பிரிவின் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அறிக்கையை விசேட வைத்திய நிபுணர் குழாத்திற்கு ஆற்றுப்படுத்திய பின்னர் இக்குழாமின் விதப்புரை சகிதம் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) இவ்விதப்புரையின் பிரகாரம் இப்பிரச்சினை வைத்தியர்களின் கவனயீனம் காரணமாக இடம்பெற்றிருக்குமாயின் சம்பந்தப்பட்ட நோயாளிக்கு நியாயமானதொரு இழப்பீட்டினைப் பெற்றுத்தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) அவ்வாறாயின் குறித்த நட்டஈட்டை பெற்றுக்கொடுப்பது எப்போது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1435 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— கலாச்சார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொழும்பு சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலை எப்போது திறக்கப்பட்டது என்பதையும்,

(ii) அதனை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட மொத்த தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) திறக்கப்பட்டதன் பின்னர் அதன் மின்சாரம் துண்டிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பின் நூதனசாலை மூடப்பட்ட திகதிகள் எவை என்பதையும்,

(iii) மின்சாரக் கட்டணம் உரியவாறு செலுத்தப்படாமைக்கான காரணம் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1436 / '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொட்டாவ நகரில் புதிதாக வீதி சமிஞ்ஞை தொகுதி எப்போது பொருத்தப்பட்டது என்பதையும்,

(ii) இந்த சமிஞ்ஞை தொகுதி முறையாக இயங்காமல் மஞ்சல் நிற குமிழ் மாத்திரம் எரிவதற்கான காரணம் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த வீதி சமிஞ்ஞை தொகுதியை செயற்படச் செய்வதற்கு செலவிடப்பட்ட மொத்த தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அதனை நிர்மாணித்த நிறுவனம் எது என்பதையும்,

(iii) முழுக்கொடுப்பனவும் செலுத்தப்பட்டு விட்டதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2009, மே 20, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1204/ '09

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2005,2006,2007 மற்றும் 2008 ஆகிய ஆண்டுகளில் சுயாதீன தொலைக்காட்சி தேர்தலுக்கு முன் விளம்பரங்களை பிரசாரம் செய்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி தேர்தலுக்கு முன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் மேற்படி நிறுவனம் ஒவ்வொரு அரசியல் கட்சியிடமிருந்தும், நிறுவனங்கள் மற்றும் ஆட்களிடமிருந்தும் ஈட்டியுள்ள தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி தேர்தலுக்கு முன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் விளைவாக அறவிடப்படவேண்டியுள்ள தொகை எவ்வளவென்பதையும்

(ii) இது எந்த கட்சியிடமிருந்து, எந்த நிறுவனத்திடமிருந்து மற்றும் எந்த நபரினது பிரசார நடவடிக்கைகள் சார்பாக என்பதையும், அவர் குறிப்பிடு வாரா?

(ஈ) இன்றேல்,ஏன்?

1258 / '09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் இறங்குத்துறைகள் சிலவற்றை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி அடிக்கல்கள் நாட்டப்பட்ட இடங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி அடிக்கல் நாட்டுதல் நடைபெற்றது எப்போதென்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அடிக்கற்கள் நாட்டப்பட்ட இடங்களில் தற்போது அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில் அது எவ்போதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1259 / '09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்று அமுல்படுத்தப் படுகின்றதா என்பதையும்,

(ii) கடற்றொழிலாளர்கள் மேற்படி ஓய்வூதியத் திட்டத்தின் பங்காளர்கள் ஆகும் போது செலுத்த வேண்டிய நிதி வீதம் எவ்வளவென்பதையும்,

(iii) தற்போதைக்கு ஓய்வூதியம் பெறுகின்ற கடற்றொழிலாளர்கின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஓய்வூதியத் திட்டத்திற்கு அரசாங்கத்திடமிருடந்து நிதி ரீதியான பங்களிப்பு வழங்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அந்த நிதி வீதம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றெல், ஏன்?

---

## 2009, மே 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1260 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 ஆம் வருடத்தில் லோன்லைன் மீன்பிடி முறைக்காக கடற் றொழிலாளர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கியதா என்பதையும்,

(ii) ஆமெனில், ஒவ்வொரு மாவட்டத்திற்குமேற்ப அவ்வாறு நிவாரணம் வழங்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) லோன்லைன் மீன்பிடி முறைக்கு கடற்றொழிலாளர்களை ஊக்குவிப் பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1262 / '08

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) சுனாமினால் பெற்றோரை அல்லது பாதுகாவலரை இழந்த பிள்ளைகளின் செலவுகளுக்காக விசேட நிதியமொன்று ஆரம்பிக்கப்படுமென "மகிந்த சிந்தனையில்" குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விசேட நிதியம் எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(ii) மேற்படி நிதியத்தின் மூலம் நிவாரணம் வழங்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அதற்காக செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி விசேட நிதியத்தினால் நிவாரணம் வழங்கப்பட்டுள்ள பிள்ளை களின் பெயர் மற்றும் முகவரி ஆகிய விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1263 / '08

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டதா என்பதையும்,

(ii) மேற்படி நிவாரணங்கள் யாவையென்பதையும்,

(iii) இந்நிவாரணங்கள் எப்போதிருந்து அமுல்படுத்தப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2009, மே 22, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1264 / '09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 சனவரி மாதம் முதல் இற்றைவரையிலான காலப்பகுதியில் எத்தனை வாவிகளிலும் நீர்த்தேக்கங்களிலும் மீன் வளர்ப்பு ஆரம்பிக்கப் பட்டுள்ளதென்பதையும்,

(ii) மேற்படி வாவிகளும் நீர்த்தேக்கங்களும் யாவையென்பதையும்,

(iii) இவற்றில் வளர்க்கப்படும் மீன் இனங்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி வாவிகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் மீன் உற்பத்தி எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1265 / '09

கௌரவ பேமசிறி மானகே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி அவர்கள் இலங்கைக்கு எத்தனை முறை விஜயம் செய்துள்ளார் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர் இலங்கைக்கு விஜயம் செய்த திகதிகளையும், எச்செயற்பாடுகளுக்காக வருகை தந்தார் என்பதையும்,

(ii) அவர் இலங்கைக்கு விஜயம் செய்து கலந்துரையாடல்களை நடத்திய நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1267 / '09

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும், உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போதைய மேதகு சனாதிபதியின் ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) இந்த ஆலோசகர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்,

(iii) இந்த ஆலோசகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் யாவையென்பதையும்,

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஆலோசகர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்கள்

*

அனர்த்த முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சர்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னைய தெரி குழுவின் வேலையைத் தொடர்வதற்காகவும் அதனை பூர்த்தி செய்வதற் காகவுமான பாராளுமன்றத் தெரிகுழு,—

"1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 10 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தின் தெரிகுழுவொன்று, அவ்வாணைக்குழுவானது சட்டங்களை இயற்றுவதற்கு முன்னர் அவற்றை மீளாய்வு செய்வது தொடர்பான அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் செயற்திறன்களை மதிப்பிடு வதற்கும் மேலே கூறப்பட்ட மீளாய்வின் நோக்கங்களை விரிவுபடுத்துவதனை கருத்திற்கொள்வதும் மேலும் அரசியலமைப்பிற்கு அனைத்துத் தேவையான கட்டங்களிலும் திருத்தங்களை முன்மொழிவதும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் இயைபுறுவதனை உறுதிப்படுத்துவதற்கான மாற்று வழிகளை கருத்திற்கொள்வதற்கான அரசியலமைப்பின் xvi ஆம் அத்தியாயத்தின் கீழான உயர்நீதிமன்றத்தின் அரசியலமைப்பு நியாயாதிக்கத்தின் செயற்பாட்டினை மதிப்பிடு வதற்கும் நிறுவப்பட்டதனாலும்,

அத்துடன் சொல்லப்பட்ட பாராளுமன்றத் தெரிகுழு 2002 ஆம் ஆண்டு திசெம்பர் 10 ஆம் திகதி வரை அது எப்பணியில் ஈடுபட்டிருந்ததோ அப்பணியை எடுத்துக் கூறியும் அதன் எதிர்கால நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டத்தை எடுத்துக்காட்டியும் அத்திகதி வரையிலான இடைக்கால அறிக்கையொன்றை முன்வைத்துள்ளதாதலாலும்,

அத்துடன் சொல்லப்பட்ட பாராளுமன்றத் தெரிகுழு 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை காரணமாகச் சொல்லப்பட்ட இரட்டை ஆணையைப் பூர்த்தி செய்வதற்கு இயலாதிருந்ததாலாலும்,

முன்னைய தெரிகுழு பணியைத் தொடர்ந்து நடாத்தி பூர்த்தி செய்வதற்கும், அதற்கமைய பின்வரும் குறிப்பீட்டு நியதிகளை நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

(அ) மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான நிறுவகத்தின் பங்கினையும் ஆணையையும் பலப்படுத்தும் குறிக்கோளுடன், 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணியாற்றுகையை மீளாய்தலும், அதன் பயனுறுதன்மையை முன்னேற்றுவதற்கான வழிவகைகளை முன்மொழிதலும், இணைப் பணி புரியப்படும் சந்தர்ப்பங்களைக் குறைத்தலும், சொல்லப்பட்ட சட்டத்துக்கான திருத்தங்களை விதந்துரைத்தலும், அத்துடன்

(ஆ) அரசியலமைப்பின் xvi ஆம் அத்தியாயத்தின் கீழ் சட்டங்களை இயற்றுவதற்கு முன்னரான மீளாய்வும், உயர் நீதிமன்றத்தின் அரசியலமைப்புச்சார் நியாயாதிக்கத்தின் பிரயோகமும் தொடர்பாக அரசியலமைப்பின் ஏற்பாடு களினது பயனுறுதன்மையை மதிப்பீடுசெய்தலும், அரசியலமைப்புச்சார் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான மாற்று வழிமுறைகளைக் கவனத்திற் கொள்ளுதலும், அத்தகைய மீளாய்வின் நோக்கெல்லையை விசாலிப்பதனைக் கவனத்திற் கொள்ளுதலும், அத்துடன் அவசியமானவிடத்து, அரசியலமைப்புக்கான திருத்தங்களை முன்மொழிதலும்,

பின்வருமாறு மேலும் தீர்மானிக்கின்றது.

(2) (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகர் அவர்களின் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தெரிகுழு இருபத்தொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(3) குழுவானது பின்வருவன தத்துவமுடையததால் வேண்டும்,-

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயித்தல்,

(ஆ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களை முழுமையாகக் கவனத்துட் கொள்வதற்கு அவசியமெனக் குழு கருதக்கூடியவாறாக, அதன் முன்னர் தோன்றும்படி எவரேனுமொருவரைக் கட்டளையிட்டழைத்தல், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைக் காண்பிக்கும்படி எவரேனுமொருவரைத் தேவைப்படுத்துதல், அல்லது எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஏற்றல்,

(இ) குழுவுக்கு உதவிபுரிவதெற்கென இயைபான துறைகளிலான வல்லுனநர் களினதும் நிபுணர்களினது சேவைகளைப் பெறுதல், அத்துடன்

(ஈ) காலத்துக்குக்காலம் இடைக்கால அறிக்கைகளைச் செய்தல், அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து நடாத்திச் செல்லல்

(4) குழுவானது அத்தகைய எல்லாக் கருமங்களையும் கவனத்துட்கொண்டதன் மேல், குழு தாபிக்கப்பட்டதிலிருந்து ஆறு (6) மாதங்களினுள் அல்லது, பாராளுமன்றம் அதன் தற்றுணிபின் பேரில் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியினுள் அதன் அறிக்கையைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

கௌரவ ஆர். எம். பத்ம உதயசாந்த குணசேக்கர
கௌரவ சமன்சிறி ஹேரத்
கௌரவ பியசிறி விஜேநாயக்க
கௌரவ (திருமதி) அன்ஜான் உம்மா
கௌரவ (வண) அத்துரலியே ரதன தேரர்
கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன
கௌரவ ஹேமகுமார நாணாயக்கார
கௌரவ பாடலி சம்பிக்க ரணவக்க
கௌரவ (வண.) அக்மீமன தயாரத்ன தேரர்
கௌரவ என். எஸ். என். பி. ஜயசிங்க
கௌரவ தீபால் குணசேக்கர
கௌரவ மொஹமட் முஸம்மில்
கௌரவ சரத் குமார குணரத்ன
கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னி ஆரச்சி
கௌரவ கீதாஞ்சன குணவர்தன
கௌரவ (வண) எல்லாவல மேதானந்த தேரர்,— இலக்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் தரம் சர்வதேச தரங்களுக்கு ஏற்புடையதா என்பதனை விசாரிப்பதற்கான பாராளுமன்ற தெரிகுழு,—

இலங்கையில் சந்தையில் உள்ள இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் உள்ளடக்கம், சேர்க்கை, உறையிடல், பிரசாரம் என்பன சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப நடைபெறுகின்றதா என்பது அகில இலங்கை மக்களிடையே ஒரு கேள்வியாக உள்ளதுடன் உலகில் பிரபல்யம் வாய்ந்த பால் மாவை உற்பத்தி செய்கின்ற மற்றும் விற்பனை செய்கின்ற இக்கம்பனிகள் மேலதிக இலாபம் பெறும் பொருட்டு மனித உயிருக்கு மிகவும் பாதகமான இரசாயனப் பொருட்களை உள்ளடக்கி, பால்மா போன்று விற்பனை செய்வது மிகப் பிரசித்தி பெற்ற விடயமாகும் என்பதனாலும் கடந்த ஆண்டில் இதில் ஒரு கம்பனி சீனாவில் குழந்தைகளுக்கான பால்மாவில் "மெலமைன்" என்ற கடுமையான விஷ இரசாயணப் பொருளைக் கலந்திருந்தமை சட்டத்தின் முன்னால் நிரூபிக்கப்பட்டதால் சீன அரச சட்ட முகவர் நிலையத்தின் மூலம், அக்கம்பனி உத்தியோகத்தர்கள் இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு பல உத்தியோகத்தர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதனாலும்,

இந் நிலைமை பற்றிக் கவனம் செலுத்துகையில், இந்நாட்களில் இலங்கையில் பால் மா ஒரு பிரதான உணவாக மாறி, இதன் மூலம் இறக்குமதி செய்யப்படும் பால் மாவுக்கு பாரியதொரு சந்தை உருவாகி உள்ளதாதலாலும், இச் சந்தையை கட்டியெழுப்புவதற்காக பலம் வாய்ந்த பிரசார ஊடகங்களினால் பால் மாவின் உள்ளடக்கம் தொடர்பான பிழையானதும் பொய்யானதுமான பிரசாரங்களைச் செய்து மக்களை ஏமாற்றி இப்பால் மா அத்தியாவசியமானதொரு உணவுப் பொருளென்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஏற்படுத்துகின்ற செயற்பாட்டின் இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் தரம் எவ்வாறென்பதை விசாரித்து நடவடிக்கை மேற்கொள்வது நாட்டு மக்களின் இறைமையை கொண்டதும் சட்டவாக்கத்துக்குமான பிரதான நிறுவனத்தின் பிரதிநிதிகளான எமது கடமையாகுமாதலாலும்

இந் நிலைமையைக் கவனத்திற்கொண்டு இது தொடர்பாக முறைப்படி ஆய்வுகளைச் செய்து அரசுக்கும் அது தொடர்பாக செயற்படும் அனைத்து நிறுவனங்கள்/ நபர்களுக்குமான சட்டங்கள், சிபாரிசுகள் மற்றும் தீர்வுகளைக் கண்டறிந்து சமர்ப்பிப்பதற்கும் பின்வரும் விடயங்கள் பற்றி கவனம் செலுத்த வேண்டுமென முன்மொழிகின்றோம்.

(அ) (i) இலங்கையில் பால் மா இறக்குமதி செய்வோர் யாரென்பதை அறிந்து கொள்ளல்,

(ii) ஒவ்வோர் இறக்குமதியாளரும் இறக்குமதி செய்யும் பால் வகைகள், அளவு, மற்றும் உற்பத்தி செய்யும் நாடு ஆகியன யாவை என்பதை அறிந்து கொள்ளல்,

(ஆ) (i) இந்த ஒவ்வோர் இறக்குமதியாளராலும் இறக்குமதி செய்யப்படும் பால் மாவில் அடங்கி உள்ளவை, உறை ஆகியவை சர்வதேச தரத்துக்கு ஏற்புடையதா என்பதை கண்டறிதல்,

(ii) இந்த இறக்குமதிப் பால் மா சர்வதேச சுகாதார பாதுகாப்புச் சட்டங்களுக்கு ஏற்புடையதா என்பதைக் கண்டறிதல்,

(இ) (i) இந்த இறக்குமதிப் பால் மா இறக்குமதியாளர்கள் வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் கம்பனிகளினூடாக பால் மாவின் உள்ளடக்கம் மற்றும் போசாக்கு தொடர்பாக மிகைப்படுத்திய மற்றும்/அல்லது பிழையான காட்சியொன்றை ஏற்படுத்துவதனூடாக மக்கள் ஏமாற்றப்படல் மற்றும்/ அல்லது உள்ளடக்கம் தொடர்பான பிழையான கூற்றுக்களை முன்வைப்பதனால் மற்றும் / அல்லது தனது உற்பத்திகளை மக்கள் மனதில் பதிய வைப்பதற்காக இலத்திரனியல், அச்சு, துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகள், பதாதைகள் மற்றும் பெயர்ப் பலகைகளை உபயோகிக்கின்றதா என்பதைக் கண்டறிதல்.

(ii) இந்த ஒவ்வோர் இறக்குமதிப் பால் மா வர்த்தகரும், இறக்குமதியாளரும், வியாபாரத் துறையில் மேற்கொள்கின்ற பாரிய பிரசார நடவடிக்கைகள் பாதாகமான முறையில் மக்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா என்பதைக் கண்டறிவதல்.

(iii) மேற்படி இறக்குமதிப் பால் மா வர்த்தகர்கள் இறக்குமதியாளர்கள் விநியோகத்தர்கள் மேற்கொள்கின்ற அநீதியான மற்றும் / அல்லது அநாவசியமான மற்றும் மிகைப்படுத்தப்பட்ட போட்டி ரீதியான வர்த்தக பிரச்சாரங்களினூடாக சந்தையில் பால் மாவின் விலை அநாவசியமான விதத்தில் அதிகரிக்கின்றதா என்பதை கண்டறிதல்.

(ஈ) (i) மேற்படி இறக்குமதிப் பால் மா வர்த்தகர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் பொது மக்களின் பணத்திலிருந்து மறைமுகமான நன்மைகளைப் பெறுவதற்கு இறக்குமதிச் சலுகைகள் வரி மன்னிப்பு மற்றும் வேறு சலுகைகளை பெற்றுக் கொள்கின்றார்களா என்பதை கண்டறிவதற்கும்,

(ii) மேற்படி இறக்குமதிப் பால் மா சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு ஏற்றதாக இல்லாத மற்றும் / அல்லது தரத்தில் குறைந்திருப்பின் மற்றும்/ அல்லது உள்ளடங்கியுள்ள சேர்க்கைகள் பற்றி பிரச்சார ஊடகத்தின் மூலமாக பொய்களை புனைந்து மக்களை ஏமாற்றுவதாயின், மேற் குறிப்பிட்டுள்ள பல்வேறு விதமான சலுகைகள் மற்றும் ஏனைய சலுகைகள் வழங்கப்படுதல் நியாயமானதா என்பதை கண்டறிவதல்.

(உ) மேற்படி விடயங்களை பகுப்பாய்வு செய்த பின்னர்,

(i) இதனோடு சம்பந்தப்பட்ட சட்டரீதியான நிலைமையை கவனத்திற் கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும்,

(ii) இதனோடு சம்பந்தப்பட்ட இறக்குமதி தரக்கட்டுப்பாடு, சுகாதாரம், சுங்கம், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஆகிய நிறுவனங்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கும்,

(iii) இதன் மூலம், இறக்குமதியாளர்களையும், நுகர்வோரையும், பாதுகாப்ப தற்கும், மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் மொத்தத்தில் இதனோடு சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் தர ரீதியில் பலப்படுத்துவதற்குத் தேவையான சிபாரிகளை வழங்குவதற்கும்,

(ஊ) விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்துகின்ற அரச கொள்கையை முதன்மையாகக் கொண்ட வேலைத் திட்டத்தின் முக்கியமானதொரு அம்சமான, இலங்கையை பாலினால் தன்னிறைவடையச் செய்யும் இலக்குகளை அடைவதில் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்ற பால் மாவை பிரபல்யப்படுத்தும் திட்டத்தின் மூலமாக பாரதூர மான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற காரணங்களை பற்றி ஆராய்வதற்கும்,

பாராளுமன்றத்திற்கு முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்குமான ஒரு தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகர் அவர்களின் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தெரிகுழு இருபத்தொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. குழுவானது பின்வருவன தத்துவமுடையததால் வேண்டும்,-

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயித்தல்,

(ஆ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களை முழுமையாகக் கவனத்துட் கொள்வதற்கு அவசியமெனக் குழு கருதக்கூடியவாறாக, அதன் முன்னர் தோன்றும்படி எவரேனுமொருவரைக் கட்டளையிட்டழைத்தல், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைக் காண்பிக்கும்படி எவரேனுமொருவரைத் தேவைப்படுத்துதல், அல்லது எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஏற்றல்,

(இ) குழுவுக்கு உதவிபுரிவதெற்கென இயைபான துறைகளிலான வல்லுனநர் களினதும் நிபுணர்களினது சேவைகளைப் பெறுதல், அத்துடன்

(ஈ) காலத்துக்குக்காலம் இடைக்கால அறிக்கைகளைச் செய்தல், அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து நடாத்திச் செல்லல்

4. குழுவானது அத்தகைய எல்லாக் கருமங்களையும் கவனத்துட்கொண்டதன் மேல், குழு தாபிக்கப்பட்டதிலிருந்து ஒரு (1) வருடத்தினுள் அல்லது, பாராளுமன்றம் அதன் தற்றுணிபின் பேரில் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியினுள் அதன் அறிக்கையைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க

கௌரவ ஏ. எம். நௌஷாட்

கௌரவ ரவீந்திர சமரவீர

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ மொஹமட் ஷபீக் ரஜாப்டீன்

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ துனேஷ் கன்கந்த

கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன,— அனுமதியற்ற நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை விசாரணை செய்வதற்கான பாராளுமன்ற தெரிகுழு,—

பொது மக்களிடமிருந்து பல கம்பனிகள் வைப்புகளைப் பெற்றுவருவது தெரிய வந்துள்ளதாலும்,

இக்கம்பனிகள் பெருமளவு வட்டி வீதங்களை வழங்குவதாக அறிவித்து பொதுமக்களி டமிருந்து வைப்புகளை கவர்ந்ததன் விளைவாக பல மில்லியன் அளவான பெருந்தொகைப் பணத்தை பெரும் எண்ணிக்கையிலானோர் இழந்திருப்பதாலும்,

இந் நடவடிக்கைகள் வெளிப்படையாகவே மேற்கொள்ளப்பட்டிருப்பதாலும்,

"நாட்டின் பொருளாதார, விலை ஸ்திரத்தன்மை நிதி முறைமையின் ஸ்திரத்தன்மை எனும் முக்கிய குறிக்கோளை பாதுகாக்கும் பொறுப்பை வகிப்பதாக" தானே கூறுகின்ற இலங்கை மத்திய வங்கி இந்நிறுவனங்களை கண்காணிக்கவும் மேற்பார்வை செய்யவும் ஒழுங்கு படுத்தவும் தவறியதன் மூலம் முழுமையான கடமை தவறல் குற்றத்திற்குள்ளாகி யிருப்பதாலும்,

இதில் சம்பந்தப்பட்ட கம்பனிகளுள் சில "கோல்டன் கீ கிறெடிட் கார்ட் " கம்பனியும் அதன் பல துணைக் கம்பனிகளும், "ஓகந்த" எனும் பெயரில் இயங்கும் ஒரு கம்பனி, "சக்வித்தி" என்ற பெயரில் இயங்கிய இன்னொரு தனி நபர், " தண்டுவம் முதலாளி" என பொதுவாக அழைக்கப்படும் இன்னொருவர் மற்றும் "ஸ்ரீலங்கா ஹியூமன் ரிசோசஸ் டிவலப்மெண்ட் கோப்பறேட்டிவ் பேங்க் சொசைட்டி லிமிட்டெட்" ஆகியனவாகுமென்பதாலும்,

இக்கம்பனிகளின் வீழ்ச்சி பலரை முழுமையாக அநாதரவானவர்களாக்கி அவர்களின் வாழ்நாள் சேமிப்புக்களை பறித்துள்ளமையாலும்,

இவ்வீழ்ச்சியின் விளைவாக ஏற்பட்ட மொத்த இழப்புத்தொகை ரூபா 300 பில்லியனை விஞ்சியுள்ளதுடன் அது அரச வருவாய்க்கு இழப்பை ஏற்படுத்தியுமுள்ளதென்று அறிவிக்கப்படுவதாலும்,

இப்பிரச்சினைகள் ஏற்பட்டமை ஏனைய கம்பனிகளையும் பாதித்தமையால், அவை வைப்புகளிலிருந்து பணம் மீளப்பெறல் பிரச்சினையொன்றை எதிர்நோக்குவதாலும்,

நீண்ட காலம் ஆகுமுன்னர் இப்பிரச்சினைகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படலாம் என மத்திய வங்கி ஆளுநர் 2006 நவம்பர் 02 ஆந் திகதி அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கு உறுதி கூறியிருந்தமையாலும்,

மத்திய வங்கி இது வரை எந்த பயன்மிக்க நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனவும் இந்தந் தோல்வியுற்ற கம்பனிகளின் சொத்துக்களை மேற்பார்வை செய்யும் விதம் தொடர்பாக நம்பிக்கையீனம் ஒன்று நிலவுவதாகவும் தென்படுவதாலும்,

பின்வரும் விடயங்களை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க, ஒரு பாராளுமன்றத் தெரிகுழு நியமிக்கப்பட வேண்டுமென இச் சபை தீர்மானிக்கின்றது :-

(அ) இச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டிருந்த மொத்தத் தொகை,

(ஆ) யாராவது பெரும்தொகையை வைப்புச் செய்தவர்கள் தம் பணத்தை தந்திரமாக மீளப் பெற்றிருக்கிறார்கள் எனவும், அவ்வாறாயின் யார் இந்தத் தனிநபர்கள் என்பதையும்,

(இ) இந்தக் கம்பனிகளின் செயற்பாடுகளை கண்காணிக்க, மேற்பார்வை செய்ய, ஒழுங்குபடுத்த இலங்கை மத்திய வங்கி தவறியமைக்கான காரணங்கள்,

(ஈ) வைப்பாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள்,

(உ) இக் கம்பனிகளின் ஏதாவது சொத்துக்களை விற்றல் அல்லது மாற்றல் தொடர்பான எந்த கொடுக்கல் வாங்கலும் வைப்பாளர்களின் நலனுக்காகவே என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள்,

(ஊ) இவ் வகையான எதிர்கால நிகழ்வுகளைத் தடுக்க, நாணயச் சட்டம் மற்றும் இவ்வகையான செயற்பாடுகளை கையாளும் ஏனைய சட்டங்களின் கீழ் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்,

(எ) இக் கம்பனிகளின் வீழ்ச்சியினால் பொது நிதி மீது ஏற்பட்ட தாக்கம்,

(ஏ) வைப்பாளர்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, தற்போதுள்ள சட்டங்களைத் திருத்துவதற்கு அல்லது புதிய சட்டங்களை உருவாக்குவதற்கான தேவை,

(ஐ) குழு பொருத்தமானதெனக் கருதும் வேறு ஏதேனும் விடயங்கள்,

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகர் அவர்களின் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தெரிகுழு இருபத்தொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. குழுவானது பின்வருவன தத்துவமுடையததால் வேண்டும்,-

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயித்தல்,

(ஆ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களை முழுமையாகக் கவனத்துட் கொள்வதற்கு அவசியமெனக் குழு கருதக்கூடியவாறாக, அதன் முன்னர் தோன்றும்படி எவரேனுமொருவரைக் கட்டளையிட்டழைத்தல், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைக் காண்பிக்கும்படி எவரேனுமொருவரைத் தேவைப்படுத்துதல், அல்லது எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஏற்றல்,

(இ) குழுவுக்கு உதவிபுரிவதெற்கென இயைபான துறைகளிலான வல்லுனநர் களினதும் நிபுணர்களினது சேவைகளைப் பெறுதல், அத்துடன்

(ஈ) காலத்துக்குக்காலம் இடைக்கால அறிக்கைகளைச் செய்தல், அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து நடாத்திச் செல்லல்

4. குழுவானது அத்தகைய எல்லாக் கருமங்களையும் கவனத்துட்கொண்டதன் மேல், குழு தாபிக்கப்பட்டதிலிருந்து ஒரு (1) வருடத்தினுள் அல்லது, பாராளுமன்றம் அதன் தற்றுணிபின் பேரில் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியினுள் அதன் அறிக்கையைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

பா. 50/ ’09

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ கபீர் ஹாசீம்

கௌரவ ருக்மன் சேனாநாயக்க,— பாலுற்பத்தி பொருட்களின் உலகளாவிய விலைக் குறைப்பின் நன்மைகளை நுகர்வோர்களுக்கு பெற்றுக்கொடுப்பது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற தெரிகுழு,—

பாலுற்பத்திப் பொருட்களின் விலை உலக சந்தையில் கடந்த ஆறு மாதங்களில் குறைவடைந்திருப்பதாலும்,

விலை குறைவடைந்துள்ள பயனை அரசாங்கம் நுகர்வோருக்கு வழங்கத் தவறிவிட்டதாலும்,

பாலுற்பத்திப் பொருட்களின் உலகளாவிய விலைக்குறைப்பின் நன்மைகளை அதன் மக்களுக்கு வழங்க உலக நாடுகள் நடவடிக்கை எடுத்திருப்பதாலும்,

உலக பாலுற்பத்திப் பொருட்களின் விலைகளின் வீழ்ச்சியின் விகிதாசாரத்தினைக் கருத்தில் கொள்கையில், பாலுற்பத்திப் பொருட்களின் விலைக் குறைப்பின் நன்மைகளை மக்களுக்கு இம்மியளவிற்கும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதிருப்பதாலும்,

பால் உற்பத்திப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகத்தின் மீது பல்வேறு வரிகளை விதிப்பதன் மூலம் இப்பாலுற்பத்திப் பொருட்களை முற்றுமுழுவதுமாக செயற்கையானதொரு விலையில் சந்தைப்படுத்தி, மக்களது நலனின் ஒரே பாதுகாவலனான அரசாங்கத்தை ஒரு கறுப்புச் சந்தைக் காரனாக ஆக்கியிருப்பதாலும்,

பால்மாவின் தரம் கருத்தில் கொள்ளப்படுவதை பொறுத்த அளவில், பாலுற்பத்தி பாதுகாப்பட்டுள்ளதாலும்,

மோசமான நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்த வரும் அரசாங்கம், உலகசந்தையில் சரிந்து வரும் பாலுற்பத்திப் பொருட்களின் நன்மையினை மக்களுக்கு வழங்காதிருப்பதற்காக நடவடிக்கை எடுத்து வருவதாலும்,

பின்வருவன தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.

(அ) பல்வேறு வகையான வர்த்தகப் பெயர்களைக் கொண்டுள்ள பால் உற்பத்திப் பொருட்களின் விலை உலக சந்தையில் குறைந்துள்ளமை,

(ஆ) பால் உற்பத்திப் பொருட்களின் இறக்கமதி மற்றும் விற்பனை மீது அரசாங்கம் விதித்துள்ள பல்வேறு வகையான வரிகள்,

(இ) பால் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் யதார்த்தத்திற்கு முரணாக அதிகளவு இலாபத்தை அரசாங்கம் பெற்றுக்கொள்கிறதா என்பதையும் அதன் மூலம் தனது நிதி நெருக்கடிகளை சமாளிக்க முயற்சிக்கின்றதா என்பதையும்

(ஈ) பால் உற்பத்திப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள யதார்த்தத்திற்கு முரணான வரிகளை தவிர்த்து, பால் உற்பத்திப் பொருட்கள் மீதான விலையை தீர்மானித்து நிர்ணயித்தல்.

(உ) இதனோடு தொடர்புடைய ஏனைய விடயங்கள்

(2) (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகர் அவர்களின் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தெரிகுழு இருபத்தொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(3) குழுவானது பின்வருவன தத்துவமுடையததால் வேண்டும்,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயித்தல்,

(ஆ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களை முழுமையாகக் கவனத்துட் கொள்வதற்கு அவசியமெனக் குழு கருதக்கூடியவாறாக, அதன் முன்னர் தோன்றும்படி எவரேனுமொருவரைக் கட்டளையிட்டழைத்தல், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைக் காண்பிக்கும்படி எவரேனுமொருவரைத் தேவைப்படுத்துதல், அல்லது எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஏற்றல்,

(இ) குழுவுக்கு உதவிபுரிவதெற்கென இயைபான துறைகளிலான வல்லுனநர் களினதும் நிபுணர்களினது சேவைகளைப் பெறுதல், அத்துடன்

(ஈ) காலத்துக்குக்காலம் இடைக்கால அறிக்கைகளைச் செய்தல், அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து நடாத்திச் செல்லல்

4. குழுவானது அத்தகைய எல்லாக் கருமங்களையும் கவனத்துட்கொண்டதன் மேல், குழு தாபிக்கப்பட்டதிலிருந்து ஒரு (1) வருடத்தினுள் அல்லது, பாராளுமன்றம் அதன் தற்றுணிபின் பேரில் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியினுள் அதன் அறிக்கையைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.